<u>சுருக்கம்</u>

மாற்றுத் திறனாளிகள் நலன் –2011–2012 ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோலால் இயங்கும் ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்திற்கு ரூ.2.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந. 2.1)த் துறை

அரசாணை(நிலை) எண். 30 நாள்:14–03–2012

பங்குனி 1, திருவள்ளுவர் ஆண்டு 2043

படிக்க:-

1. அரசாணை நிலை எண் 72, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை, நாள் 06–09–2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண்.5792/இவாதஇ–1/2011, நாள் 18.7.2011.

-------

<u>ஆணை:</u>

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2010–2011 ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் படைத்த கல்வி பயிலும் 385 மாணவ மாணவிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட மின்சார ஸ்கூட்டர்கள் வழங்கிட ரூ.1,00,10,000/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில் 2011–2012 ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கிட வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.80.00 இலட்சத்தையும் 11.07.2011 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்த போது 2011–2012 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குவதற்காக அனுமதித்த தொகையான ரூ.120.00 இலட்சத்தையும் சேர்த்து (ரூ.80.00 இலட்சம் + ரூ.120.00 இலட்சம்) மொத்தமாக ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடுமாறும், பெட்ரோல் ஸ்கூட்டர்கள் கோரும் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது என்றும், பணிபுரியும் / சுயதொழில்புரியும் மாற்றுத் திறனாளிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கிடக் கோரி அதிக அளவில் விண்ணப்பித்து வருகிறார்கள் என்றும், 2011–2012 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர்கள், ஒதுக்கீடு செய்யப்படும் மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய

ஸ்கூட்டர்கள் பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிட அனுமதி வழங்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

i. 2011–2012ஆம் நிதியாண்டில் கால்கள் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை ஒன்றின் விலை ரூ.50,000/– என்ற வீதத்தில் 400 எண்ணிக்கையில் வாங்கிட ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) பின்வருமாறு நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் எண்ணிக்கை | ஒன்றின் விலை | மொத்தத் தொகை |
|---|---|---|
| **400 வண்டிகள்** | **ரூ.50,000/–** | **ரூ.2,00,00,000/–** |

ii. 2011–2012 ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர்கள், ஒதுக்கீடு செய்யப்படும் மாவட்டங்களில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு முன்னுரிமையிலும், எஞ்சிய ஸ்கூட்டர்கள் பணிபுரிபவர்கள் மற்றும் சுயதொழில் புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கிடவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

iii. தற்பொழுது மத்திய, மாநில அரசுகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கு பயணப்படி வழங்கப்பட்டு வருவதால், இத்திட்டத்தின் கீழ் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் பயணப்படி பெறும் மாற்றுத் திறனாளிகளாக உள்ள இப்பணியாளர்களுக்கு வழங்க தேவையில்லை என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

iv. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000ன்படி திறந்த ஒப்பந்தப்புள்ளி மூலம் வாங்கி வழங்கவும், இச்செலவினத்தை மேற்கொள்ளவும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அரசு அதிகாரமளிக்கிறது.

v. இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை மேலே பத்தி 3(i)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் வாங்கி வழங்கப்பட வேண்டும்.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2235–சமூக பாதுகாப்பும் நலனும்– 02 சமூக நலன் –101 – மாற்றுத் திறனாளிகள் நலன்– பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II– மாநிலத் திட்டம் – JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் –19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல்”.
(து.தொ.கு 2235–02–101–JH-1914)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் 2011–2012 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.80.00 இலட்சம் போக கூடுதலாக தேவைப்படும் நிதி ரூ.120.00 இலட்சம் 2011–12–ம் ஆண்டின் இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். 2011–12 ஆம் ஆண்டின் இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கம் செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. எனினும் இச்செலவினம் குறித்து சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இச்செலவினம் 2011–12 துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்படும். இதற்குரிய கருத்துருவையும், இச்செலவினத்தை 2011–12–ம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவையும் உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா. எண்.நிதி(சந)/95/DS(VS)/2012, நாள் 13.3.2012ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1856 (ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் /அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**<u>நகல்:-</u>**

நிதி (சந/வ.செ. பொது. I/II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர்,சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இ. கோ/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.